**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 27-02-2024**

**திருச்சிராப்பள்ளி(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-27 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-28 | 2024-02-29 | 2024-03-01 | 2024-03-02 | 2024-03-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 36.0 | 37.0 | 37.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 25.0 | 25.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 80 | 80 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 20 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 12 | 12 | 10 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

இந்த வாரத்தில் மழை எதிர்பார்க்கப்படவில்லை . சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (84.0% & 28 %), 36.0°C மற்றும் 25°C என எதிர்பார்க்கப்படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 11 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். கிழக்கு திசையில் காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

இந்த வாரத்தில் தமிழகத்தின் சராசரி மழைப்பொழிவு இயல்பை விட குறைவாக இருக்கும்

## குறுஞ்செய்தி :

| |
|---|
| இடி மற்றும் மின்னலின் தாக்குதலை முன்னெச்சரிக்கையாக தெரிந்து கொள்ள தாமினி கைபேசி செயலியினை உபயோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சூரியகாந்தி | பூவின் அடிப்பாகத்திலுள்ள இதழ்கள் மற்றும் பின்புறம் மஞ்சள் நிறமடைந்து பூக்கொண்டையிலுள்ள விதைகள் கடினத்தன்மை அடைந்திருப்பது முதிர்ச்சிடைந்தமைக்கு அறிகுறியாகும். உலர்ந்த பூக்கொண்டைகளைப் பறித்து உலர்த்திய பின் விதைகளைத் தனியே பிரித்தெடுத்து சுத்தம் செய்யவேண்டும். அறுவடைக்குப் பின் விதை நேர்த்தி செய்து விதைகளை 8 முதல் 9 சத ஈரப்பதம் வரும் வரை நன்கு உலர வைக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தக்காளியில் முன்பருவ இலைக்கருகல் நோய் ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த ப்ரோபிகோனசோல் 25% EC 1 மி.லி/லிட்டர் என்ற அளவில் நடவு செய்த 30 வது மற்றும் 50 வது நாட்களில் தெளிக்கவும். |
| வெண்டை/ லேடிஸின் விரல் | நிலவி வரும் வானிலையின் காரணத்தால் வெண்டையில் சாம்பல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். இதனை கட்டுப்படுத்த நோயின் அறிகுறி தெரிந்ததும் கார்பென்டாஸிம் மருந்தினை 1 கிராம்/லிட்டர் என்ற அளவில் மழை அல்லாத நாட்களில் தெளிக்கவும் மற்றும் தேவைப்பட்டால் அடுத்த 15 நாளில் தெளிக்கவும். தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையில் வெண்டையில் குருத்து மற்றும் காய்த் துளைப்பான் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட அல்லது சேதப்பட்ட இளங்குருத்து மற்றும் நுனித்தண்டுகளை சேகரித்து அழித்து விடவும். ஒரு ஏக்கருக்கு 5 எண்ணிக்கை என்ற அளவில் இனக்கவர்ச்சிப் பொறி வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும் அல்லது அசாடிராக்டின் 1.0 % EC 3.0 மி/லி அல்லது இமாமெக்டின் பென்ஸோவேட் 5 % SG 4.0 கிராம் / 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிபுற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்படுவதை தவிர்க்க கோழி பண்ணைகளில் இரு ஓரங்களிலும் நனைந்த சாக்கை கட்டி விட வேண்டும். |